

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் தனது அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று (31.5.2023) காலை சென்னைக்கு புறப்பட்டபோது, டோக்கியோ விமான நிலையத்தில் ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ் அவர்கள் வழியனுப்பி வைத்தார்.





தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க ஐம்பெரும் விழாவில், அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் உள்ள பேரறிஞரின் திருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செய்து சங்கத்தின் முன்னாள் செயலாளர் மறைந்த இரமேஷ் அவர்களின் திருவுருவப்படத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பற்றி இரமேஷ் எழுதிய பாடலையும் வெளியிட்டார். மேலும் இந்நிகழ்வில், தொகுப்பூதிய ஆசிரியர் நியமன முறையை ஒழித்து, 53000 ஆசிரியர்களை காலமுறை ஊதியத்திற்குள் சேர்த்த முத்தமிழறிஞரின் புகழை போற்றி 53000 பேனாக்களை மாணவர்களுக்கு பரிசளித்து, சிறந்த ஆசிரியர்களுக்கு விருது & சான்றிதழ்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

### இல்லம் தேடிக் கல்வி; கணினி வகுப்புகள்; திறன்மேம்பாட்டு பயிற்சி; உயர்கல்வி பயிலும் நிதியுதவியால்

# அரசுப்பள்ளிகளுக்கு மாணவர்கள் வருகை அதிகரிக்கிறது!

## தினகரன் நாளிதழ் சிறப்புச் செய்தி!

சென்னை,ஜூன்.1–

பள்ளிக் கல்வித்துறையில் அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக அரசுப் பள்ளிகளை நோக்கி மாணவர்கள் அதிக அளவில் வருவதால் இந்த ஆண்டு அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சிக் காலத்தின்போது பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டு வந்ததன் காரணமாக அமைச்சர்களே பலபேர் மாற்றப்பட்டனர். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் 7 முறை கல்வி அமைச்சர்கள் மாற்றம் நிகழ்ந்துள்ளது. முன்னதாக, திமுக அரசுதான், கல்வித்துறையை இரண்டாக பிரித்து பள்ளிக்கல்வி, உயர்கல்வி என்று மாற்றி அமைத்தது.

அதற்காக தனித் தனி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அதற்கு பிறகு பள்ளிக்கல்வித்துறையில் பல மாற்றங்கள் வந்தன. சமச்சீர் கல்வி என்ற புதிய முறை கொண்டு வரப்பட்டது. அதற்கேற்ப பாடத்திட்டங்களும் மாற்றப்பட்டன. அதற்கு பிறகு கடந்த 10 ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறையில் பல குளறுபடிகள் நடந்தன. ஒன்றிய அரசு கொண்டு வர உள்ள புதிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்ட பல அம்சங்களை நிறைவேற்றும் வகையில் பள்ளிக் கல்வித்துறையில் அவற்றை புகுத்தும் முயற்சிகள் நடந்தன. அதன் தொடக்கமாக பள்ளிக் கல்வியின் இயக்குநர் பதவி என்பது ரத்து செய்யப்பட்டு, ஆணையர் பதவி அறிமுகம் செய்யப்பட்டது.

அதன்படி இரண்டு ஆணையர்கள் கடந்த கால ஆட்சியில் நியமிக்கப்பட்டனர். ஆனால், பள்ளிக் கல்வித்துறையில் பெரிய மாற்றங்கள் ஏதும் நடக்கவில்லை. ஆணையர் பதவியில் இருந்த அதிகாரி ஆசிரியர்களையோ, மாணவர்களையோ நேரில் சந்திப்பதில்லை. பள்ளிகளுக்கு நேரில் சென்று ஆய்வும் மேற்கொண்டதில்லை. மாவட்ட வாரியாக பள்ளிகள் செயல்படும் விதமும் அறிந்திருக்கவில்லை. அதனால் பல குளறுபடிகள் நடந்தன. குறிப்பாக, காலையில் ஒரு உத்தரவு போட்டால், அந்த உத்தரவு மாலையில் மாற்றப்படும். இதனால் ஆசிரியர்கள் மாணவர்கள் குழப்பம் அடைந்தனர்.

இது தொடர்பாக வந்த புகார்களின் பேரில் தற்போது அந்த பதவியில் இருந்து ஆணையர் மாற்றப்பட்டுள்ளார். இதையடுத்து, மீண்டும் இயக்குநர் பதவியே வருமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. தற்போது உள்ள அரசு வந்த பிறகு , பள்ளிக் கல்வித்துறையில் புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இல்லம்தேடிக் கல்வி, கணினி வகுப்புகள், வேலை வாய்ப்புக்கான பல புதிய முயற்சிகள், மாணவர்களுக்கான திறன்மேம்பாட்டு பயிற்சிகள், என்று பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதிய உணவுத் திட்டம் போல காலைச் சிற்றுண்டி திட்டம் கொண்டு வரப்பட்டு, நல்ல வரவேற்பை பெற்றதால், அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த திட்டம் விரிவு படுத்தப்படுவதுடன், அனைத்து வகுப்பு மாணவர்களும் பயன் பெறும் வகையில் இந்த திட்டம் மேம்படுத்தப்பட உள்ளது.மேலும், அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவியர் உயர்கல்வி செல்லும் போது, ரூ.1000 வழங்கும் திட்டமும், அரசுப் பள்ளிகளில் படித்தால் உயர்கல்வி படிப்புகளில் 7.5 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் முன்னுரிமை கிடைப்பது போன்ற பல்வேறு திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இது தவிர பள்ளிக் கல்விக்கான இந்த நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.40 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் படித்து வெளியில் வந்தால் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற நலன்கள் கிடைப்பது உறுதியாகியுள்ளது. மேலும், உயர்கல்விக்கான வழிகாட்டும் மையங்களையும் இந்த ஆண்டில் பள்ளிக்கல்வித்துறை அமைத்து, பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழிகாட்டி வருகிறது. அதனால், அரசுப் பள்ளிகளின் மீது தற்போது பெற்றோரின் கவனம் திரும்பியுள்ளது. அதனால் கடந்த ஆண்டே, அரசுப் பள்ளிகளை நோக்கி மாணவர்கள் வரத் தொடங்கி சேர்க்கை அதிகரித்தது.

அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும், மாணவர் சேர்க்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், பள்ளிகள் திறப்பதற்கு முன்னதாகவே மாணவர்களை அரசுப் பள்ளிகளை நோக்கி ஈர்க்கும் வகையில் பேரணி நடத்த வேண்டும் என்று பள்ளிக் கல்வி, தொடக்கக்கல்வித்துறைகள் கல்வி அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளன. இந்த பேரணியில் அரசுப் பள்ளிகளில் செய்யப்பட்டுள்ள வசதிகள், திட்டங்கள், காலை சிற்றுண்டித் திட்டம், விலையில்லா பொருட்கள் வழங்குதல், உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், இட ஒதுக்கீடு விவரங்கள் அனைத்தும் பொது மக்கள் அறியும்படி இந்த பேரணியில் வெளிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த பேரணியை நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுப் பள்ளிகளில் 100 சதவீத மாணவர்கள் சேர்க்கை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இடைநின்ற மாணவர்கள் குறித்த விவரங்கள் திரட்டபட்டு, அவர்களை மீண்டும் பள்ளிகளுக்கு திரும்ப அழைத்து வரும் பணியில் மேற்கொள்ளப்பட உள்ளது. பள்ளிகளை விட்டு வெளிமாநிலங்களுக்கு சென்றுள்ள மாணவ மாணவியரின் விவரங்களை யும் திரட்டி, அவர்கள் உரிய முறையில் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

இதற்காக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரடியாகவே பல பள்ளிகளுக்கு சென்று மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் பேசி அவர்களின் குறைகளை கேட்டு வருகிறார். அதே போல பள்ளிகளில் நீடித்து வரும் பிரச்னைகள், கட்டமைப்பின்மை குறித்த பிரச்னைகளையும் கேட்டு வருகிறார். அது விரைவில் சரி செய்யப்பட்டு, இந்த கல்வி ஆண்டில் அரசுப் பள்ளிகள் தனியார் பள்ளிகள் போல செயல்படத் தொடங்கும் என்றும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வித்துறையில் இது வரை இருந்த சில இடர்பாடுகள் தற்போது நீங்கியுள்ள நிலையில், வரும் கல்வி ஆண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மனநிறைவைக் கொடுக்கும் ஆண்டாக இருக்கும்.

**நன்றி**
**தினகரன்,**
**31.5.2023**

### அண்ணல் அம்பேத்கர்

# தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்த விளக்க கையேடு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்!

சென்னை, ஜூன் 1-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (31.05.2023) சென்னை, கிண்டி, சிட்கோ வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.100 கோடி மதிப்பில் புதியதாக அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்த திட்ட விளக்க கையேட்டினை வெளியிட, MSME அரசு செயலாளர் வி.அருண் ராய், பெற்றுக் கொண்டார். விழாவில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின சங்கத்தினர், தொழில் முனைவோர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்து விளக்கப்பட்டது.

விழாவில் புத்தகத்தை வெளியிட்டு பேசிய அமைச்சர் “ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு பாதுகாவலராக விளங்கும் முதல்வர் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திட நடப்பு நிதி நிலை அறிக்கையில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் புதிய தொழில் முனைவோருக்கும், தொழில் துவங்கி நடத்தி வருபவர்களுக்கும், தொழிலை விரிவாக்கம் செய்பவர்களுக்கும் 35 சதவீதம் முதலீட்டு மானியமும், 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு கல்வித் தகுதி முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டதுடன், 55 வயது உள்ளவரும் புதிதாக தொழில் தொடங்க முன்வரலாம். இத்திட்டத்தின் கீழ், ஆர்வமுள்ள புதிய தொழில் முனைவோர் உற்பத்தி, வணிகம், சேவை சார்ந்த அனைத்துத் தொழில்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற 2 ஆண்டு காலத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, MSME துறையின் மூலம் NEEDS, UYEGP, PMEGP, PMFME ஆகிய 4 வகையான சுய வேலை வாய்ப்பு திட்டங்கள் மூலம் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.58 கோடியே 34 லட்சம் மானியத்துடன் ரூ.177 கோடியே 72 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 2,344 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின புத்தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 13 ஸ்டாட்அப் நிறுவனங்களுக்கு ரூ.17 கோடியே 25 லட்சம் பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளது. 8 ஸ்டாட்அப் நிறுவனங்களுக்கு ரூ. 11 கோடி பங்கு மூலதனம் விரைவில் வழங்கப்படவுள்ளது. புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தினை மாவட்ட பொது மேலாளர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இதர துறை அலுலவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அரசால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களை, பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், தொழில் முனைவோர்கள் முழுமையாக பயன்படுத்தி தொழில் துறையில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக கொண்டு வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்”.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி. சிஜி தாமஸ், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. எஸ். மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் பச்சோவ், இன்ட்கோசர்வ் முதன்மை செயல் அலுவலர் திருமதி.மோனிகா ராணா, தொழில் வணிக கூடுதல் இயக்குநர் ஏகாம்பரம் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின சங்கத்தினர், தொழில் முனைவோர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டனர்.

# வாகை சூடும் முதல்வரே! தாயகம் வருக வருகவே!



சிங்கைசப்பான் தேசங்களில் குறிக்கோள் பயணம்
சிறப்புடன் வென்ற முதல்வரே வருக! வருக!

மங்கலம் பாடும் மாட்சி தமிழ்நாட்டின்
மறுமலர்ச்சி நாயகரே வருக! வருக!

ஒளிமல்கும் ஆட்சிஏந்திச் சென்று வென்றோய்
உயர்ந்தோங்கு தொழில்வளம் கொணர்ந்த முதல்வரே!

களிமல்கும் வெல்வினைப்பாடுகள் கவர்ந்தேதான்
காலம்வெல்லும் ஞாலம் கண்டு நிமிர்ந்தோய் வருக! வருக!

வெற்றி மிகுத்த வீரமிகுந்த தளபதியாரே! கொற்றவரே!
தமிழ்நாட்டுக் குடிகள் காப்போய்! வருக! வருக!

கற்றவர்கள் வாழ்த்துமுழங்கக் கருதிய முடித்தோய்
நற்றவத்தால் யாம் பெற்றநடுநிலை முதல்வரே வருக! வருக!

தேவைத் தொழில்முனைவர் தகுதியர்கள்
திறத்தினை ஆய்ந்தறிந்து ஈர்த்தவரே வருக! வருக!

மாவையத்துள் முதன்மை தமிழ்நாடு காணவே
மனஉறுதி கொண்டுழைக்கும் முதன்மை முதல்வரே! வருக! வருக!

தமிழர் உயிரெலாம் தன்னுயிராய்க் கொண்டவரே!
தாயகத்தை மீட்டெடுத்த எம்தலைவரே வருக! வருக!

பகைமை புறந்தள்ளித் தகைமை வாகை சூடியோய்
வணங்கி வாழ்த்தி வரவேற்கிறோம் மாமுதல்வரே! வருக! வருக!

மூதறிஞர் கலைஞரின் யாதினும் இனியவரே!
சாதனையின் உன்னதச் சரித்திரச் சான்றானவரே!
முதல்வர் மாண்பமை மு.க. இஸ்டாலின் பெருந்தகையே!
தாயகம் வருக! வருகவே!



பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்

### மக்கள் தொகை அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்வது

# தென் மாநிலங்களுக்கு இழைக்கும் பெரும் அநீதி!

## ஒன்றிய அரசுக்கு தெலங்கானா அமைச்சர் கே.டி. ராமாராவ் கடும் கண்டனம்!



ஹைதராபாத், ஜூன் 1

மக்கள் தொகை அடிப்படையில் தென்மாநிலங்களின் மக்களவை தொகுதிகளுக்கான வரையறையை மேற்கொள்வது, ஒன்றிய அரசின் பேச்சைக்கேட்டு மக்கள் தொகை கட்டுப்பாட்டை வெற்றிகரமாக நிறைவேற்றிய தென் மாநிலங்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும் என்று தெலங்கானா பாரத் ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் செயல் தலைவரும், மாநில தகவல் தொழில் நுட்ப அமைச்சருமான கே.டி. ராமாராவ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அது பற்றிய செய்தி வருமாறு :

“மக்கள் தொகை அடிப்படையில் 2026ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள மாநிலங்களுக்கான எல்லை நிர்ணயம் என்பது தென் மாநிலங்களின் நலன்களுக்கு முற்றிலும் கேடு விளைவிக்கும் அநீதியாகும். இந்த அநீதிக்கு எதிராக தென் மாநில கட்சிகள் அனைத்தும் எவ்வித பேதமும் பார்க்காமல் ஒன்றாக இணைந்து, ஒன்றிய அரசுக்கு தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும்.

ஏனென்றால், ஒன்றிய அரசின் பேச்சை கேட்டு மக்கள் தொகை கட்டுப்பாட்டை வெற்றிகரமாக தென்மாநிலங்கள் செயல்படுத்தியுள்ளன. அதனால், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி நிர்ணயம் செய்து, அவற்றுக்கு தண்டனை அளிப்பது என்பது துரதிர்ஷ்டவசமானது.

ஒன்றிய அரசின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து, நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் மக்கள்தொகை பெருக்கத்தை பல்வேறு சிக்கல்களுக்கு இடையில் வெற்றிகரமாகத் தென் மாநிலங்கள் கட்டுப்படுத்தி குறிக்கோளை அடைந்துள்ளன. அவ்வாறு செயல்பட்டதன் விளைவாக அவை அநீதியை சந்தித்துள்ளன. ஆனால், மக்கள் தொகை கட்டுப்பாட்டில் ஒன்றிய அரசின் கொள்கைகளை எவ்விதத்திலும் காதில் போட்டுக்கொள்ளாத வடமாநிலங்கள், அவற்றின் மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப மக்களவை தொகுதி நிர்ணயத்தால் பலன்களை பெற இருக்கின்றன.

அதாவது, கேரளா, தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் மக்கள் தொகை கட்டுப்பாடு என்ற கொள்கைகளைப் பின்பற்றி, வட மாநிலங்களை விட மனித வளர்ச்சி குறியீட்டில் முன்னணியில் இருக்கும் நிலையில் இந்த தொகுதி நிர்ணயம் மூலம் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால், வெறும் 18 சதவிகிதம் மக்கள் தொகை கொண்ட தென் மாநிலங்கள் தேசிய உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 35 சதவிகிதம் பங்களிப்பு செய்து வருகின்றன. அந்த வகையில் மக்கள் தொகை அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்வது மாபெரும் அநீதியாகும். அதுமட்டுமல்லாமல், இந்த எல்லை நிர்ணயம் பகுத்தறிவற்ற முடிவு என்பதுடன், ஜனநாயகம் என்ற கட்டமைப்பில் ஏற்றத்தாழ்வுகளையும் உண்டாக்கும். அதனால் எதிர்வர உள்ள இந்த ஆபத்துக்கு எதிராக தென்மாநிலங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.”

இவ்வாறு தெலங்கானா அமைச்சர் கே.டி. ராமாராவ் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு கை குலுக்கிய சிங்கப்பூர் - ஜப்பான் நாடுகள்!

## உங்களில் ஒருவன்!... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர்களிடம் நான், “மேயர்கள் மாநாட்டிற்கு சென்னை மேயராக ஜப்பானுக்கு வந்திருக்கிறேன். துணை முதலமைச்சராக இருந்தபோது ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம், மெட்ரோ ரயில் திட்டம் ஆகியவற்றுக்காக வந்திருக்கிறேன். அப்போது ஜப்பான் செய்த நிதியுதவிதான், பாதுகாப்பான குடிநீரைப் பல மாவட்ட மக்களுக்கு வழங்கியது. அவர்கள் இன்னமும் உங்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்கள். அதுபோலவே, சென்னையின் பொதுப் போக்குவரத்தில் முக்கியப் பங்காற்றும் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேறியதிலும் ஜப்பானின் உதவியை மறக்க முடியாது.

**ஜப்பானுக்கு நான் வந்தபோதெல்லாம், நான் என்ன கேட்டேனோ அதை ஜப்பான் நிறைவேற்றியிருக்கிறது. எனக்கு மிக நெருக்கமான நாடு ஜப்பான். சென்னையில் என் வீட்டுக்குப் பக்கத்து கட்டடத்தில்தான் ஜப்பான் நாட்டின் தூதரகம் உள்ளது**” என்றேன்.

திங்கள் மாலையில் ஜப்பான் தொழில்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுடன் நேரடிச் சந்திப்பு நடைபெற்று, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**மே 30 - செவ்வாய்**

காலையில் என்.இ.சி. எனப்படும் எதிர்காலத் தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளின் முன்னணி நிறுவனத்தைப் பார்வையிடச் சென்றோம். அந்தமான் தீவுகள் உள்பட உலகின் பல நாடுகளிலும் கடலுக்கடியில் கேபிள் பதிக்கும் தொழில்நுட்பத்தையும் இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. புதிய தொழில்நுட்பங்கள் எந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன, எதிர்காலத்தில் அவை எந்தெந்த வகையில் உதவும் என்பதை என்.இ.சி. நிறுவனத்தினர் விளக்கிக் கூறினர். உதாரணமாக, தற்போது பயோ-மெட்ரிக் முறையில் நாம் கைரேகையைப் பதிவு செய்து அலுவலகத்திற்குச் செல்கிறோம். இதன் அடுத்தகட்டமாக, மனிதர்களின் முகத்தை அடையாளம் கண்டு அனுமதிக்கும் தொழில்நுட்பம் உருவாகியுள்ளது. விமான நிலைய கவுண்ட்டர்களில் மக்கள் கூட்டமாகக் காத்திருக்கும் பொழுதுகளில், கொரோனா போன்ற கட்டுப்பாடுகள் நிலவும் நேரங்களில், விமானத் திற்கான போர்டிங் பாஸ் பரிசோதனை, பாதுகாப்பு பரிசோதனை உள்பட எல்லாவற்றிலுமே ஒருவரின் முகத்தை அடையாளமாக வைத்து விரைவாக முடித்து விடலாம். உரிய அனுமதியோ, அங்கீகாரமோ இல்லாதவர்களை எந்த இடத்திலும் உள்ளே விடாமல் தடுத்து விட முடியும்.

இந்தியாவில் ஐ.ஐ.டி. உள்ளிட்ட நிறுவனங்கள் ஜப்பானின் என்.இ.சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பங்கேற்றுள்ள மாணவர்களுக்கு இத்தகைய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க என்.இ.சி. முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். இந்தியாவில் உள்ள தங்கள் அலுவலகத்துடன் இது குறித்துப் பேசி, நல்ல முடிவைத் தெரிவிப்பதாக என்.இ.சி. நிறுவனத்தினர் கூறினர்.

மாலையில் ஓம்ரான் என்ற நிறுவனத்துடன் சந்திப்பு நடந்தது. மருத்துவப் பரிசோதனைகள் சார்ந்த கருவிகள் தயாரிக்கும் நிறுவனமான ஓம்ரான், இந்தியாவில் முதன்முறை யாக தமிழ்நாட்டில்தான் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த நிகழ்வு நிறைவடைந்தவுடன், டோக்கியோவில் உள்ள உலகின் மூன்றாவது உயரமான கட்டடமான ஸ்கை ட்ரீ என்ற கட்டடத்திற்குச் சென்றோம். அதன் உச்சியில் இருந்து பார்த்தபோது, டோக்கியோ நகரத்தின் பேரழகை ரசிக்க முடிந்தது. நகரக் கட்டுமானம் எப்படி இருக்கிறது என்பதையும் காண முடிந்தது. **உயரமான கட்டடத்தில் நான் நிற்பதை விட, தமிழ்நாட்டை இந்திய அளவில், உலக அளவில் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உன்னத இலட்சியமே மனதில் தோன்றியது.**

நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞரின் உடன் பிறப்புகளான உங்களின் ஆதரவுடன்தான் கழகம் ஒவ்வொரு உயரத்தையும் எட்டுகிறது. அதனால்தான், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகவும் அதனடிப்படையிலான பொருளா தார முன்னேற்றத்திற்காகவும் மேற்கொண்ட பயணத்தை விரிவான கடிதமாக எழுதியிருக்கிறேன்.

சூரியன் உதிக்கும் நாடு என்று ஜப்பானுக்குப் பெயர் உண்டு. நாம் உதயசூரியனின் ஒளியால் விடியல் கண்ட தமிழ்நாட்டுக்காரர்கள். இன்னும் சிறிது நேரத்தில், இங்கே பொழுது புலரும். தாய்த் தமிழ்நாட்டை நோக்கிய பயணம் தொடங்கும். கடல் கடந்த பயணத்தால், தமிழ்நாட்டின் நிலை உயரும் என்ற நம்பிக்கையுடன் வருகிறேன்.

தமிழ்நாட்டின் மீதும் - தமிழ்நாடு அரசின் மீதும் தமிழ்நாட்டு மக்களின் மீதும் மிகப்பெரிய நம்பிக்கையை ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் தொழில் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டில் ஜனவரி 2024-இல் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு “வருக வருக” என அனைவரையும் அழைத்து, “கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சி போலன்றித் தமிழ்நாடு மாறியிருக்கிறது. தமிழ்நாடு அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுகிறது” என்ற நம்பிக்கையை தொழில் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்திய மனமகிழ்வுடன், வெற்றிகரமாக சென்னை திரும்புகிறேன்.



ஜப்பான் நாட்டில் ஓசாகா நகருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தந்தபோது அவருக்கு தமிழில் எழுதிய பதாகையோடு வரவேற்பளித்தனர்.

உடன்பிறப்புகளின் முகம் காண உங்களில் ஒருவனான நான் ஆவலுடன் இருக்கிறேன். நமக்கான பணிகள் காத்திருக்கின்றன. முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை சிறப்பாகக் கொண்டாடுவோம். அவர் உருவாக்கிய நவீனத் தமிழ்நாட்டை, முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்டுவோம்.

அன்புடன்,
**மு.க.ஸ்டாலின்**
திருவள்ளுவர் ஆண்டு 2054,
வைகாசி 17 31.05.2023

---

### சிங்கப்பூர் - மதுரை இடையே விமான எண்ணிக்கையை அதிகரித்து

# டோக்கியோ - சென்னை நேரடி விமான சேவையை அறிமுகப்படுத்துக!

### ஒன்றிய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜீன் 1-**

**டோக்கியோ மற்றும் சென்னை இடையே நேரடி விமான சேவையை மீண்டும் அறிமுகப்படுத்தவும், சிங்கப்பூர் - மதுரை இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதி ராதித்ய சிந்தியா அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், டோக்கியோ – சென்னை இடையே நேரடி விமான சேவையை மீண்டும் இயக்குவது குறித்தும், சிங்கப்பூர் – மதுரை இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதி ராதித்ய சிந்தியா அவர்களுக்கு நேற்று (31.5.2023) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், 2024 ஜனவரியில் தமிழ்நாடு அரசு நடத்த உத்தேசித்துள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தொழில் முதலீட்டாளர்களை அழைப்பதற்காகவும் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வெற்றிகரமாக சுற்றுப்பயணத்தை தாம் மேற்கொண்டுள்ளதைக் குறிப்பிட்டு, தனது பயணத்தின் போது, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த இந்தியர்களை, குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைச் சந்தித்ததை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், நிசான், தோஷிபா, யமஹா, கோமேட்ஸு, மிட்சுபிஷி, ஹிட்டாச்சி போன்ற பல ஜப்பானிய பெருநிறுவனங்கள் தங்களது உற்பத்தி ஆலைகளை அமைத்துள்ளதையும், ஜப்பான்இந்தியா முதலீட்டு ஊக்குவிப்பு கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரங்களில், மூன்று தமிழ்நாட்டில் உள்ளதையும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் பெருமைபட சுட்டிகாட்டியுள்ளார். தமிழ்நாட்டில் 600க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் செயல்பட்டு வருவதால், கடந்த இருபதாண்டுகளில் ஜப்பான் நாட்டினரின் வருகை கணிசமாக உயர்ந்துள்ளதாகவும், இந்தியாவில், ஜப்பானிய சமூகத்தின் மிகப்பெரிய தாயகமாக சென்னை திகழ்வதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார். அதோடு, ஜப்பானில் கணிசமான புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்ளதையும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி தொடர்பான துறைகளில் அவர்கள் வல்லுநர்களாக உள்ளதையும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக, தமிழகத்திற்கும் ஜப்பானுக்கும் இடையிலான பொரு ளாதார மற்றும் கலாச்சார உறவுகள் தொடர்ந்து வலுவடைந்து வருவதுடன், சுற்றுலா வடிவிலும் இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் வளர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையே நேரடி விமான சேவை இல்லை என்றும், 2019 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், ஜப்பான் நாட்டின் மிகப்பெரிய விமான நிறுவனமான ஆல் நிப்பான் ஏர்வேஸ் (ANA) சென்னை மற்றும் டோக்கியோ இடையே நேரடி விமான சேவையைத் தொடங்கியதாகவும், கோவிட்19 தொற்றுநோய் காலத்தில் இது நிறுத்தப்பட்ட தாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள். அதன்பிறகு இந்த விமான சேவை மீண்டும் தொடங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். நேரடி விமான இணைப்பு இல்லாததால், சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையிலான பயண நேரம் சுமார் 7 மணி நேரம் இரட்டிப்பாகியுள்ளதாகவும், சென்னை – டோக்கியோ இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள ஜப்பானிய தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2024, ஜனவரி மாதத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தமிழ்நாடு நடத்தவுள்ள நிலையில், ஜப்பானிலிருந்து அதிக முதலீடுகளை ஈர்த்திட ஏதுவாக, நேரடி விமானங்களை மீண்டும் தொடங்குவது உண்மையில் வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இவற்றைக் கருத்தில் கொண்டு, சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேபோல், சிங்கப்பூரில் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 4 இலட்சம் பேர் கணிசமான அளவில் வசித்து வருவதாகவும், அவர்கள் இன்னும் தமிழ்நாட்டில் தங்கள் சொந்த நகரங்கள் மற்றும் கிராமங்களில், முக்கிய மாக தென் தமிழ்நாட்டில் தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இருந்து பலர் சிங்கப்பூருக்கு வேலைக்காக செல்கின்றனர் என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூருக்கும், சென்னைக்கும், திருச்சிக்கும் இடையே தினசரி விமான சேவையும், சிங்கப்பூருக்கும், கோயம்புத்தூருக்கும் இடையே தினசரி ஒரு விமானமும் இயக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையே வாரத்திற்கு மூன்று முறை மட்டுமே விமானச் சேவை உள்ளதாக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார். சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையே அதிக விமானங்கள் இயக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையை சிங்கப்பூர் அரசின் உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கே.சண்முகம் தன்னைச் சந்தித்த போது எழுப்பியதாகவும், இதேபோன்ற கோரிக்கையை சிங்கப்பூரில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்கள் பலரும் முன்வைத்ததாகவும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையில் அதிக விமானங்களை இயக்கிட அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை சாதகமாக பரிசீலித்திட ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டோக்கியோ மற்றும் சென்னை இடையே நேரடி விமான இணைப்பை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் மற்றும் சிங்கப்பூர்–மதுரை இடையே விமானங்களின் எண்ணிக்கையை, குறைந்தபட்சம் ஒரு தினசரி விமானமாக அதிகரிக்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை தான் மீண்டும் வலியுறுத்துவதாகவும், இவற்றை முன்னுரிமை அடிப்படையில் ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதி ராதித்ய சிந்தியா அவர்கள் பரிசீலித்திட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---


ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கான களப்போராளி தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் – பெ.மனோரஞ்சிதம் இணையரின் சுயமரியாதை திருமண நிகழ்வு நேற்று அண்ணா அறிவாலயத்திலுள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இம்மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று வாழ்த்தினார். இம்மணவிழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

---

### வினோத் வேலாயுதம் தலைமை! மு.க.தமிழரசு, அன்பகம் கலை, மருத்துவர் கலை கதிரவன் முன்னிலை!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் கழக அலுவலகம் திறப்பு விழா!

### நே.சிற்றரசு எம்.சி.- தயாநிதி மாறன் எம்.பி.- நா.எழிலன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

*சென்னை, ஜூன் 1-*

*சென்னை மேற்கு மாவட்டம் ,ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க அலுவலகம் திறப்பு விழா இன்று (01.06.2023-வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் எண்.3/5, புலியூர் இரண்டாவது சந்து, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-24ல் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் தலைமையில் மு.க.தமிழரசு, கழக அமைப்பு இணைச்செயலாளர் அன்பகம்க லை, மருத்துவர் கலை கதிரவன் முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் புவி. பாலாஜி பகுதி நிர்வாகிகள் என்.பி.இதயாத்பாட்சா, ஸ்டெர்லிங் மோகன், பா.கமல கண்ணன், ரா.பொன்னம்மாள், வட்டச் செயலாளர்கள் வரதை த.பரி, மு.மோகன், வரவேற்பில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. அலுவலகத்தை திறந்து வைக்கிறார்கள்.*

*இதில் பகுதி செயலாளர்கள் ந.இராமலிங்கம் எம்.சி., எஸ். மதன்மோகன் எம்.சி., ஏ.பி. என்.காமராஜ் எம்.சி., மா. பா.அன்புதுரை, ச.பரமசிவம், எஸ்.மோகன், நுங்கை வி.எஸ். ராஜ், எம்.டி.ஆர்.நாதன், டி. ஜோஸ்டேனியல், து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, எஸ்.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ப.பிரகாஷ், நுங்கை எஸ்.சுரேஷ், எம்.கே.ஆனந்த், கே.குட்டி ஜே.எம்.எச்.இம்ரான், வட்டச் செயலாளர்கள் க.சிட்டிபாபு, த.குணசேகர், டேவிட் இன்பராஜ், கே.எஸ். தினேஷ் பிரபு, எலிசபெத்அகஸ்டின் எம்.சி., மற்றும் எஸ். அருண்குமார் எம்.ஏ.ஆரோன்பிலிக்ஸ், கே.எல்.எம்.மணி, எஸ்.மேட்லின்மேரி, எம்.உமாதேவி, அ.குப்பன், ஆர்.சீனிவாசன், எஸ்.பார்த்திபன், த.ஜசன்ட், ப.சுரேஸ், எம்.டி.ஆர்.புகழ், கே.தட்சிணாமூர்த்தி, என்.இ.சரவணன், வி.என்.பாபு மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கிளை நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.*


தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) கோட்டம், திருச்சிராப்பள்ளி மண்டலம், மலைக்கோட்டை கிளையில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து, திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி, கும்பகோணம் மற்றும் நாகப்பட்டினம் மண்டலங்களில் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணப்பலன்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கே.பனீந்திர ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர்.இரா.வைத்திநாதன், கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மேலாண் இயக்குநர் எஸ்.எஸ்.ராஜ்மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன், தியாகராஜன், செ.ஸ்டாலின் குமார், அப்துல்சமது, (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் பொது மேலாளர் (திருச்சி மண்டலம்) எஸ்.சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.